மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.

IA.No.1/2025

O.S.No.158/2014

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ம் நாள் பழனியப்பன் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.M.A.சுவேதாரண்யன், B.A., B.L., (Hons.) JJ and JP (DIP)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, கோபிசெட்டிபாளையம் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியப்பன் | தந்தை பெயர் | : | நல்லப்ப உடையார் |
| கிராமம் | : | குள்ளம்பாளையம் | தாலூக்கா | : | கோபிசெட்டிபாளையம் |
| வயது | : | 76 | தொழில் | : | |

**Deposition of Witness : RW1**

<u>எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் ம.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்கு பதிலாக எழுத்துமூல ஆணையுறுதி வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

தற்போது என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் மாகாளியம்மாள் எழுதிய உயில் ஆவணம். மேற்படி உயில் ஆவணம் **<u>எமசாஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எமசாஆ.1 ஆவணத்தில் உள்ள கைரேகைகள் மாகாளியம்மாள் என்பவருடையது தான். மேற்படி மாகாளியம்மாள் தான் மேற்படி உயில் ஆவணத்தை எழுதினார். மேற்படி உயிலில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் நான் மற்றும் ராமகிருஷ்ணன் ஆவோம். என்னிடம் காட்டப்படும் உயிலில் இரண்டாவது சாட்சி

கையொப்பமிட்டுள்ளேன். மேற்படி கையொப்பம் **<u>எமசாஆ.2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்போது 76 வயதாகிறது. நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஒரு குப்பண்ணநாயக்கர் என்பவர் யார் என்று தெரியுமா என்றால் அவர் எனக்கு பழக்கமில்லை, அவர் இறந்த பிறகு, அவருடைய மாகாளியம்மாள் மேற்படி உயிலை எழுதியுள்ளார். மேற்படி குப்பண்ணநாயக்கருக்கு மாகாளியம்மாள் மட்டுமே மனைவி ஆவார். ஒரு இ.பி.பொன்னுசாமி என்பவரை எனக்கு தெரியாது. மாகாளியம்மாளின் குடும்ப விசயங்கள் எனக்கு தெரியாது. எனக்கு நல்ல ஞாபக சக்தி உள்ளது. எமசாஆ.1 உயிலை தயாரித்தவர் ஒரு பழனிவேல் ஆவார். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்ற அழைப்பாணை வரவில்லை, ராஜேந்திரன் கேட்டு கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி உயிலை நேற்றே ராஜேந்திரன் காண்பித்தாரா என்றால் இல்லை, இன்று காலை பிரமாண பத்திரிக்கையில் கையொப்பமிட்ட போது உயிலை படித்து பார்த்தேன். எனக்கு இரண்டு பெண் மக்கள், அவர்களுக்கு திருமணமாகிவிட்டது.

எனக்கு சொந்தமாக வீடு உள்ளது, நிலங்களை விற்றுவிட்டேன். மேற்படி வீடு என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் உள்ளது. என் வீட்டை இரண்டு பெண் மக்களுக்கும் கொடுப்பேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் உயில் எழுதும் போது, அவர்களுடைய குழந்தைகள் அனைவருக்கும் சேர்த்து எழுதுவார்கள். 1984-ம் வருடம் மேற்படி உயிலில் கையொப்பமிடுவதற்கு நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை, உயிலை மாகாளியம்மாள் வீட்டில் வைத்து

எழுதினார்கள். மேற்படி உயில் போலியானது என்றாலும், எனக்கு எந்த விசயமும் தெரியாமல் ராஜேந்திரன் கேட்டுக் கொண்டதால் உயிலில் உள்ளது எனது கையொப்பம் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

ABARAMURTHY SUVEDHARANYAN

Digitally signed by ABARAMURTHY SUVEDHARANYAN
Date: 2025.08.21 15:59:55 +0530

(Sd.) Palaniappan

RW1